# வளர் இளம் பெண்ணே!
# தெரிந்துகொள்

# பருவமடைதல்

**பெண்கள் முன்னேற்றம் மற்றும் ஆராய்ச்சி மையம்**
23, ஜெயராம் தெரு, D பிளாக், வசந்த் அபார்ட்மெண்ட்,
குப்பம் பீச் ரோடு, திருவான்மியூர், சென்னை-600041.

## வளர் இளம் பெண்ணே!
## தெரிந்துகொள்

# பருவமடைதல்

**பெண்கள் முன்னேற்றம் மற்றும் ஆராய்ச்சி மையம்**
23, ஜெயராம் தெரு, D பிளாக், வசந்த் அபார்ட்மெண்ட்,
குப்பம் பீச் ரோடு, திருவான்மியூர், சென்னை-600041.

# 1

இந்திய கலாச்சாரத்தில் ஓர் வளர்இளம் பெண் தன் உடல் பற்றியோ, தன் இளம் பருவத்தில் தனக்கு என்னமாதிரி உணர்வுகள் தோன்றும் என்பதை பற்றி வெளிப்படையாக பேசவோ, தனக்கு எழும் சந்தேகங்களை யாரிடமாவது கேட்பதோ ரொம்ப சிரமமான விஷயம். பெற்றோரும், ஆசிரியர்களும் இதை இளம் பெண்களுக்கு போதிக்க மறுத்து வருகிறார்கள். பாலியல் பற்றி எந்த விழிப்புணர்வும் இல்லாது இருக்கிறார்கள். பாலுணர்வு செயல்களினால் ஏற்படும் விளைவைப் பற்றி எந்த அறிவையும் பெற்றிருக்கவில்லை என்பதே உண்மை. அதற்கு ஆசிரியரும், பெற்றோருமே காரணம். ஏன் என்றால் இதைப் பற்றி பேசுவதே தவறு என்றும் இவை வெளியில் பேசக் கூடாது என்றும், ரகசியமானவை என்றும் கருதுகின்றனர். தங்கள் உடம்மைப்பற்றி கூட சரிவர தெரியாமல், பாலியல் இனப்பெருக்க உறுப்புகளைப்பற்றி எந்த தெளிவும் இல்லாதவர்களாக காணப்படுகிறார்கள். அவர்கள் உடல் பற்றிய விழிப்புணர்வு, உடலமைப்பு, பருவமடைதல், உடலுறுப்புக்களின் பரிமாண மாற்றம், ஆண், பெண் உறவுமுறை, கருவுறுதல் போன்ற பல விஷயங்களை வளர் இளம் பெண்களுக்கு தெளிவுபடுத்தி அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இக்கையேடின் நோக்கம்.

# விடலைப் பருவமும் பாலியலும்

விடலைப்பருவம் என்பது புயல்வேகம் கொண்ட பருவமாகும். ஒவ்வொரு ஆண்/பெண் பாலர்களுக்கும் ஏற்படும் வளர்ச்சி என்பது பொதுவான ஒன்று. இந்த வளரும் பருவமே ஒரு மனிதனின் வாழ்க்கையில் ஆர்வமிக்க, அதிசயக்கத்தக்க, வியப்பூட்டுகின்ற, தன்னைப்பற்றிய சந்தேகங்களை எழுப்புகின்ற புரியாத பருவம் என்று சொல்லலாம்.

10-16 வயது வரையிலான இளம் வயது வளர்ச்சி துரிதமான ஒரு வளர்ச்சி நிலையாகும். இப்பருவம் மன குழப்பங்கள், இடையூறுகள் மற்றும் மன இறுக்கம் நிறைந்த பருவம் எனலாம். இப்பருவத்தில் இவர்கள் தங்களை மேலும் வளர்த்துக் கொள்வதோடு உணர்வுபூர்வமான சுதந்திரம் வேண்டும், தன்னிச்சையாக செயல்படவேண்டும் என்று தங்கள் பெற்றோரிடம் போராடுவார்கள். இப்பருவத்தில் பலவகையான இயல்புகள், குணங்கள், முரண்பட்ட கருத்துகள் நிறைந்திருக்கும்.

விடலை பருவத்தில் மன வளர்ச்சியைவிட உடல்வளர்ச்சி வேகமாக இருக்கும். இந்த உடல் வளர்ச்சி வியப்பானதாகவும், தன்னம்பிக்கையை சிதைப்பதாகவும், வளர்ப்பதாகவும் இருக்கும். இப்பருவத்தில் கண்ணாடி முன்நின்று தன்னை அலங்காரம் செய்துகொள்வதில் மணிக்கணக்கான நேரத்தைச் செலவு செய்வதில் ஆர்வம் காட்டுவார்கள். முகப்பருக்கள், உயரம், உருவ அமைப்பு இவைகள் குறித்து பல எண்ணங்கள் தோன்றும்.

பெண்ணிற்கு மாதவிடாய் சுழற்சி, மார்பகங்கள் வளர்தல், பெண்ணுறுப்பில் முடி வளர்தல் போன்றவையும் ஆணிற்கு மீசை வளர்தல், குரல் மாற்றம் அடைதல், உடல்தசைகள் இறுகி வலுவடைதல் போன்றவை இப்பருவத்தில் நிழ்கின்றன. இப்பருவத்தில் ஆணிற்கு செக்ஸ் ஹார்மோன்கள் வளர்ச்சியடைகின்றன. பெண்ணிற்கு கருப்பை மற்றும் கருமுட்டைகள் வளர்நிலையில் இருக்கும்.

சரியான பூப்பெய்தும் பருவத்தை நம்மால் கணித்துக் கூற முடியாவிட்டாலும் இக்காலக்கட்டத்தில் ஆண், பெண் இருபாலரும் சில உடல் ரீதியான மாற்றங்களை அடைகின்றனர். பெண்ணிற்கு அவை

1. உயரம் அதிகரித்தல்
2. எடை கூடுதல்
3. மார்பு வளர்ச்சி
4. இடுப்பு பகுதியில் சதை அதிகரித்தல்
5. அக்குள் பகுதி, பெண்ணுறுப்பின் மேல் பகுதி ஆகிய இடங்களில் முடி வளர்தல்
6. இளம் தோற்றம்
7. மாதவிடாய் போன்றவை

மேற்கூறியவை சிலருக்கு துரிதமான வளர்ச்சியும், சிலருக்கு அதிக காலமும் ஆகும். உடல் வளர்ச்சியில் மாற்றம் வரும்போது மன உணர்ச்சிகளும் மாறுபடும். இம்மாற்றங்கள் உடல் ரீதியாக, மனரீதியாவும் ஹார்மோன்கள் மாற்றத்தினால் வருகிறது.

இப்பருவத்தில் தங்கள் மீது தங்களுக்கே விருப்பம் அதிகரிக்கும். நாம் எவ்வளவு அழகாக இருக்கிறோம் என்ற எண்ணம் தோன்றும். கண்ணாடிமுன் நின்று தங்கள் தோற்ற பொலிவை ரசிப்பார்கள். அதோடு இன்னும் தன்னை அலங்காரம் செய்து கொள்வதில் அதிக அக்கறை எடுத்து கொள்வார்கள். அதோடு வெளித்தோற்றத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பார்கள்.

இவ்வயதில் மன அழுத்தம் காரணமாக யாருடனும் பேசாத நிலையிலிருப்பர். சில சமயங்கள் தாங்கள் ஒடுக்கப்படுகிறோம் என்ற நினைப்பு வரும். தங்களை சுற்றியிருப்பவர் மத்தியில் அச்சமயம் பல பிரச்சினையை உருவாக்குவார்கள். பெற்றோரிடம் அதிக சலுகை, சுதந்திரத்தை எதிர்பார்ப்பார்கள். அது கிடைக்காத பட்சத்தில் எதிர்த்து போராடவும் தயங்கமாட்டார்கள். தங்கள் எண்ணங்களுக்கு, உணர்வுகளுக்கு அங்கீகாரம் வேண்டும், எல்லோரும் தங்கள் கருத்திற்கு மதிப்பு கொடுக்க வேண்டும் என்ற நிலை ஏற்படும்.

இப்பருவத்தில் தங்கள் வயதை ஒத்த வயதுடையவர்களிடம் அதிக நேரத்தை செலவழிப்பார்கள். அதோடு அவர்களிடம் நம்பிக்கையும் ஓர் நல்ல உறவு முறையும் வளர்த்து கொள்வார்கள்.

அதுமட்டுமல்லாமல் இப்பருவத்தில்தான் எதிர்பால் இனக் கவர்ச்சி ஏற்படுகிறது. அதாவது பெண்களோ அல்லது ஆண்களோ இவ்வயதில் எதிர் இன பாலரின் நட்புறவை விரும்புவார்கள். அதே போல நண்பர்கள் வட்டாரத்தில் ஒருவரை மட்டும் ரொம்ப பிடிக்கும் அந்நபரிடம் அதிக நேரத்தை செலவழிப்பர்.

இப்பருவத்தில் காதல் கதைகள் படித்தல், காதல் சம்பந்தப்பட்ட சினிமாக்களை பார்த்து ரசித்தல் துப்பறியும் நாவல்களில் வரும் கதைகளில் ஆர்வம் போன்றவை அதிகரிக்கும்.

# பருவமடைதல்

பருவமடைதல் என்பது நம் நாட்டை பொறுத்த வரை மிக முக்கியமான மற்றும் புனிதமான ஓர் நிகழ்ச்சி. ஏழை முதல் பணக்காரர்கள் வரை பல ஆயிரங்கள் செலவழிக்கும் ஓர் நிகழ்ச்சி. பருவமடைதல் என்பது பெண்/ஆண் இருபாலருக்கும் இயற்கையாக நடக்கக்கூடிய ஓர் உடல்ரீதியான மாறுதலாகும். பெண்/ஆண் குழந்தையை பொருத்தவரை பருவடைதல் என்பது உடல் ரீதியாக அவர்கள் (அதவாது ஒரு ஆணும் ஒரு பெண்ணும்) உடலுறவு மூலம் குழந்தையை உருவாக்க தகுதி பெற்று விட்டார்கள் என்பதை காட்டுகிறது.

குழந்தை பருவத்திற்கும், பருவமடைந்த பருவத்திற்கும் இடைப்பட்ட பருவம் யௌவனப்பருவம் எனப்படும். யௌவனப்பருவம் என்பது பருவமடைதலுடன் தொடங்குகிறது. இப்பருவத்தில் பாலியல் குணங்கள் வெளிப்பட ஆரம்பிக்கிறது. சராசரியாக ஒரு பெண் குழந்தை பருவமடைவதற்கு சில காலங்கள் முன் (அதாவது 11லிருந்து 14வரை பெண்களும், 14-15 வயதில் ஆண்களும்) உடல் வளர்ச்சியானது, மிக விரைவாக நடைபெறுகிறது. இந்த கால கட்டத்தில் பெண், ஆண் இருவரின் இன உறுப்புகளும் வளர்ந்து பருவமடைகின்றன. பெண் குழந்தைகளுக்கு பொதுவாக 11வயது முதல் 14வயதிற்குள் முறையான மாதவிடாய் ஆரம்பமாகிறது. இந்த முதல் மாதவிடாயைத்தான் நாம் பெண் பூப்பெய்து விட்டாள் என்று பல சடங்குகள் செய்து விழா எடுக்கிறோம் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த காலக்கட்டத்தில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. குறிப்பாக மார்பகம் விரிவடைதல், அக்குளில் முடிவளர்தல், குரலில் மாற்றம், உடல் எடை அதிகரித்தல், பிறப்புறுப்பு பகுதியில் முடி வளர்தல் போன்றவையாகும். பெண்ணை பொறுத்தவரை இப்பருவம் மிகவும் முக்கியமானதாகும். பருவமடைந்தவுடன் ஏற்படும் மாற்றம் இவர்களது மனமாற்றம், செயல் முதலியவற்றையும் மாற்றமடையச் செய்யும். இந்த பருவமடைதல் என்பது பிட்யூட்டரி சுரப்பி கீழ்பகுதியாகிய மூளையின் மூலம் உந்தப்படும் போது நிகழ்கிறது. இந்தப் பிட்யூட்டரி சுரப்பி இரண்டும் ஹார்மோன்களை

இருபாலருக்கும் உருவாக்கி பருவ மாற்றச் செயல் புரிகிறது. அதுமட்டு-மல்லாமல் பாலியல் உறுப்புகள் இயங்க ஹார்மோன் மற்றும் லியூடினைசிஸ் ஹார்மோன் காரணமாக அமைகிறது. இவையே மற்ற பாலியல் உறுப்புகளின் வளர்ச்சிக்கும் காரணமாக இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் பெண்களின் கருப்பையில் புரொஜெஸ்டிரோன் மற்றும் ஈஸ்டிரோஜன் இப்பருவத்தில் உற்பத்தியாகிறது. அது போல ஆண்களின் விதைப் பையில் டெஸ்ட்டோஸ்ட்ரோன் இப்பருவத்தில் உற்பத்தியாகிறது.

இந்த இளம் பருவப் பெண்களின் இன்றியமையாத சிக்கலே இக்கால கட்டங்களில் அவர்கள் உடம்பிலும் மனதிலும் ஏற்படும் பாலியல் தொடர்பான மாற்றங்களை புரிந்துக்கொள்ள வைப்பது தான். கல்பனாராம் என்ற மானுடவியல் அறிஞர் "இது ஒரு கரடுமுரடான புதிய அனுபவம்" என்கிறார். பூப்பெய்தலில் சிற்றூர்ப்புறத் தமிழ்ப் பெண்கள் அடையும் அனுபவம் - என்ற தன் கட்டுரையில் இத்தமிழ்ப் பெண்ணின் வாழ்க்கைச் சக்கரத்தில் இப்பூப்படைகிற அனுபவம் ஒரு முக்கியமான சிக்கலான திருப்புமுனையாக வடிவமைக்கப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டுகிறார். பூப்படைகிற ஒரு தமிழ் சிறுமி உடனடியாக அவளுடைய குழந்தைப் பருவத்திலிருந்து பிடுங்கப்பட்டு பெரிய மனுசி ஆகிவிட்டாள் என்று அவள் அறியாத ஓர் உலகிற்குள் தூக்கி எறியப்படுகிறார். ஒரு சாதாரணப் பெண் குழந்தை, ஒரு நாள் இரவிலேயே ஒரு சமூகப் பெண்ணாக உருவாக்கப்பட்டு விடுகிறாள். இந்த முக்கியமான புதிய அந்தஸ்து அவளுக்கு எப்படி வந்து சேர்கிறது என்றால் வீட்டிற்குள்ளே முடக்குதல், வீட்டிலுள்ள சகோதரர், அப்பா உட்பட ஆண் உறுப்பினர்களுடன் இயல்பாகப் பழகவிடாமல் செய்தல், அவளைச் சுற்றிக் கண்ணுக்குத் தெரியாத ஒரு வேலியை எழுப்பி விடுதல் முதலியவை மூலமாகத்தான். ஆனால் அவள் உடலில் ஏற்பட்டுள்ள உணர்வு மாற்றம் பற்றிய எந்தக் கல்வியும் அறிவியல் பூர்வமாக அவளுக்கு இந்தச் சடங்குகள் மூலமாகச் சொல்லிக் கொடுக்கப் படுவதில்லை என்பது தான் பெரிய அவலம். சடங்கை ஊரைக் கூட்டிபெரிய திருவிழா போல் நடத்துவதன் மூலம் இனி நீ வீட்டுப் பொருள் பொத்திப் பொத்திப் பேண வேண்டிய பண்டம். அப்பொழுது தான் நல்ல மதிப்பு என்ற மனோபாவத்தை தான் உருவாக்கி விடுகின்றனர். மேலும் வீட்டின் மூலையில் உட்காரவைத்து எந்தப் பொருளையும் தொடவிடாமல் பல நாள் செய்யப்படும் பல விதமான சடங்குச் சாத்திரங்கள் மூலம் அந்தச் சிறுமியின் நெஞ்சில்

ஆழமாக ஊன்றப்படுவது மாதவிடாய் என்பது தீண்டத்தகாதது, அசிங்கம், பெண்ணாய் பிறந்தால் மாதாமாதம் அடைய வேண்டிய வேதனை, அவமானம் போன்ற உணர்ச்சிகளைத்தான். இத்தகைய உணர்ச்சிகள் ஏற்படும் போது பெண் தன் பிறப்பையே தாழ்வானதாக எண்ணுகின்ற எண்ணம் உருவாகிவிடுகிறது. இந்த எண்ணத்தை, அவர்களைக் கொண்டாடுவது போல நிகழ்த்தப்படுகின்ற ஒரு விழா மூலம் சாதித்ததில்தான் நுட்பமான சூழ்ச்சி அமைந்திருக்கிறது. இந்தச் சடங்கு செய்வது எல்லாம் ஏதோ ஒரு வகையான மகிழ்ச்சி அளிப்பதாகவே இருக்கிறது என்று பல பெண்கள் கூறினர் என்கிற செய்தி ஆழ்ந்த சிந்தனைக்குரியதாகும்.

பூப்படைதல் என்ற இந்த உருவகமே பூத்தல் மலர்தல் எதற்காக? என்ற வினாவோடு இணைந்து விபரீதமான அர்த்தங்களுக்கு இட்டுச் செல்லுகின்றது. இந்த முதல் மாதவிடாய் நிகழ்ச்சி அந்தப் பெண்ணின் உடம்பு, மனம், உணர்ச்சி, பாலியல் எத்தகைய மாற்றங்களுக்கு உள்ளாகும் என்பதைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் அந்த நிகழ்ச்சியையே தனக்குச் சாதகமாகப் பெண்ணை வடிவமைக்கப் பயன்படுத்திக் கொள்ளுகிறது சமூகம்.

''முள்ளு மேல் மலர் விழுந்தாலும், முள் மலர் மேல் விழுந்தாலும்
பாதிக்கப்படுவது என்னமோ மலர் தான்

''மண்பானை விழுந்து ஒடஞ்சா திரும்பவும் ஒட்ட முடியாது, உலோகப்
பானையை ஒட்டிக் கொள்ளலாம்''.

பெண் மண்பானை போன்றவள், பஞ்சையும் நெருப்பையும் பக்கத்தில் வச்சா பத்திக்கிடத்தான் செய்யும் போன்ற உரையாடல்கள் எல்லாம் பெண்ணின் தூய்மையை மட்டும் மையப்படுத்தித் தயாரிக்கப்பட்டவைகள் தான். இவ்வாறு முதல் பூப்படைதல் நிகழ்ச்சி மூலமாகச் சமூகம் தன் மதிப்பீடுகளை அவள் மேல் திணிப்பதற்குச் சூழ்ச்சி செய்கிறதே ஒழிய, அவள் உடம்பு பற்றிய பாலியல் அறிவைக் கற்றுக் கொடுக்கச் சிறிதும் முயல்வதில்லை.

தமிழகத்தை பொறுத்தவரை இங்கு வாழும் பெரும்பான்மையான பெண்களின் வாழ்வில் பூப்பு என்பது ஓர் அதிர்ச்சியளிக்கும் மகிழ்ச்சியாகவே அமைகின்றன. ஒரு பெண்ணின் குடும்ப அங்கத்தினரோ, தோழிகளோ ஒரு பெண் பூப்படையும் முன்பு பூப்படையும் நிலையில் அவள் உடற் கூறுகளிலும்,

இயக்கங்களிலும் மனநிலையிலும் நிகழும் மாற்றங்களைப் பற்றி அறிவுறுத்துவதில்லை. பாலியல் பற்றிய உடல் ரீதியான நிகழ்வுகளைப் பற்றி வெளிப்படையாக பேசுவது அருவருக்கத்தக்கதாயும், தடை செய்யப்பட்டதாயும் உள்ளது. அதனால் பெண்கள் அவைப்பற்றிய விளக்கங்களை அறிந்து கொண்டுஅப்பருவத்தை எதிர்கொள்ளும் மனநிலைக்கு தங்களை பக்குவப்படுத்தி கொள்ளும் வாய்ப்பினை இழக்கின்றனர். இக்காரணங்களால் பருவடைதல் நிகழ்ச்சி பெண்ணின் குடும்பத்தினருக்கு மகிழ்ச்சியையும், பயத்தையும் ஒரே சமயத்தில் அளிக்கிறது. எப்படி என்றால் பெண் தங்களது பெண்மையை உடல் ரீதியாக உறுதி செய்யும் முதல் நிகழ்ச்சிதான் பருவடைதல். தங்கள் மகள் அதை உலகத்திற்கு உணர்த்தியது பெற்றோருக்கு மகிழ்ச்சி அளிக்கக் கூடிய செயல். ஆனால் பருவமடைந்த முதல் கொண்டு அவளை பாதுகாத்து அவளுக்கு எந்த ஒரு களங்கமும் உடல் ரீதியாகவோ, மனரீதியாகவோ வராமல் பாதுகாத்து அவளை ஒரு நல்ல ஆண்மகனுக்கு திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்ற முக்கிய பொறுப்பு பெற்றோருக்கு பயத்தையும், துன்பத்தையும் கொடுக்கிறது.

### பூத்தல்

சிறுமியில் ஆரம்பித்த போது
அதற்குள்ளேயா? என
அம்மாவின் பதட்டம்
அடுத்தடுத்த மாதங்களில்
இன்னும் வரவில்லையா?
ஆணியறைந்து மாட்டப்பட்ட
நாட்காட்டி என் முகத்தில்.
மாமியாரின் ஆதங்கமோ
இன்னும் வருதா? என
இடம் மாற்றி ஏற்படுத்தும் புதிய
துளைகளை.
தனியாய்ப் போனால் பிடிக்கும் முனி
தலை குளியாதிருந்தால் அடையும் தேள்கள்
என்று நீளும் கதைகளில்
குத்திக் கோர்த்தெடுக்கப்பட்ட என் தினங்கள்.

காட்டுத்தீ மரமோ
பருவங்களைக் கவனியாது
பூத்துத் தள்ளுகிறது அதன் போக்கில்
வார்த்தைத் தீ
பொசுக்கும் எனத் தெரிந்தும்
பூக்கும் பிடிவாதப் பூக்கள்
மஞ்சளில் ஆரம்பித்து,
ஆரஞ்சில் ஆழ்ந்து
குருதிச் சிவப்பிற்கே திரும்புகிறது
உபயோகித்த சானிடரி நாப்கின்களைக்
கொளுத்திய தீ.

உமா மகேஸ்வரி
குமுதம் சினேகிதி
26.4.2001, ப.எண்.40.

பொதுவாக பெண் பருவமடைந்த உடன் அவள் தீண்டத்தகாதவள், மாசுஅடைந்தவள் என்ற முத்திரை அவள் மீது சுமத்தப்படுகிறது. அது ஒவ்வொரு மாதவிடாய் காலங்களிலும் அவளை தொடர்ந்து வந்து கொண்டே இருக்கிறது. குறிப்பாக பருவமடைந்த உடன் அவளை தனி அறையில் உட்கார வைப்பதும், எந்த பொருளையும் தீண்டவிடாமல் தடுப்பதும் சாமியறையில் செல்ல விடாமலும் குடும்பத்தார் அவளை தடுத்து விடுகின்றனர். அது மட்டுமல்லாமல் ஒரு சில இடங்களில் பச்சை தென்னை ஓலையால் தனி குடில் அமைத்து அதில் அவளை உட்கார வைப்பதும் உண்டு. அப்போது அவளுடன் முதிர்ந்த பெண் ஒருத்தி துணையிருப்பாள். அம்முதிர்ந்த பெண் இப்பருவமடைந்த பெண்ணிடம், நீ ஓர் பெண் சமுதாய கட்டுப்பாட்டிற்குள் எப்படியிருக்க வேண்டும். ஓர் ஆணின் மனைவியாக குடும்ப பெண்ணாக எப்படி நடந்து கொள்ள வேண்டும். திருமணமாகும் வரை எந்த ஆணையும் நிமிர்ந்து பார்க்கவோ, பேசவோ கூடாது போன்றவைகளை எடுத்து கூறி அப்பெண்ணின் மனதில் ஓர் மாயையை உருவாக்குகிறார்கள். ஆனால் உடல் ரீதியாக வரும் மாற்றங்களைப் பற்றி சொல்ல தவறி விடுகின்றனர். அது

மட்டுமல்லாமல் பருவமடைந்த நிலையில் கெட்ட ஆவிகள் தீட்டு பெண்ணிடம் புகுந்து விடும் என்ற பயத்தில் இரும்பு, உலக்கை, துடைப்பம் போன்றவற்றையும் அவள் அருகில் வைக்கின்றனர். இதையெல்லாம் அந்த பெண்ணிற்கு அவள் உடல் மீது ஓர் அருவருப்பு ஏற்படுகிறது. அதோடு ஓர் அச்ச உணர்வும் ஏற்படுகிறது.

வார்ஜெனப்பினது வாழ்க்கைச் சுழற்சிக் கோட்பாடு இங்கு முக்கிய பங்கு வகிக்கிறது என்றே கூறலாம். வார்ஜெனப்பினது கோட்பாடு என்ன சொல்கிறது என்றால் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும், ஒருவர் தனது வாழ்வின் பழைய கட்டத்தை சார்ந்த பழக்க வழக்கங்களையும், உறவுகளையும் விட்டு பிரிந்து அடுத்த கட்டத்திற்கேற்ற சூழல்களையும், பழக்க வழக்கங்களையும் சுற்றத்தாரையும் ஏற்று வாழ பழகுவது ஆகும். இந்த பருவமடைதல் நிகழ்ச்சியும் அதைதான் விளக்குகிறது. அதாவது பருவமடைந்த பெண் தனிமைப்படுத்தப்பட்டு வாழும் கட்டம் அவளது வாழ்க்கையில் சிறுமி என்ற பருவத்திலிருந்து பொறுப்புகளை சுமக்க வேண்டிய மங்கை என்ற அடுத்த கட்டத்திற்கு படிப்படியாக தன்னை ஆயத்தப்படுத்துகிறது. இக்கட்டத்தில் சிறுமி என்னும் கட்டத்திலுள்ள பழக்க வழக்கங்கள், தொடர்புகள் எல்லாவற்றையும் விட்டு புதிய சூழ்நிலையில் வாழக் கற்று அவள் உடலும் மனமும் எதிர் கொள்ள வேண்டி இருக்கிறது.

பெரும்பாலான குடும்பங்களில் பெண்களின் தேக நலன் பூப்படையும் காலம் வரை புறக்கணிக்கப்படுகிறது. ஒரு சில பெற்றோர் பெண் குழந்தைகளுக்கு அவள் விரும்பும் உணவு வகைகளை எல்லாம் அவளுக்கு கொடுப்பதில்லை. காரணம் வேக வளர்ச்சியடைந்து விடுவாள் என்ற பயம் தான். ஆனால் பருவமடைந்த அந்த நாட்களில் அவள் உடல்நலம் ரொம்ப பேணப்படுகிறது. அவளுக்கு சத்தான ஆகாரம் வழங்கப்படுகிறது. அவளை காணவரும் சுற்றத்தாரும் பலவகை உணவு பண்டங்களை அவளுக்கு எடுத்து வருகின்றனர். அதோடு பூப்பெய்திய நாளிலிருந்து ஒரு குறிப்பிட்ட நாள் வரை நல்லெண்ணெய், முட்டை, பனைவெல்லம், உளுந்து, வெந்தயம், அரிசிமாவு போன்றவற்றை அதிக அளவில் உணவில் சேர்க்கிறார்கள். இவைகள் எல்லாம் அவளுக்கு முன்பை விட அழகான தோற்றத்தை ஏற்படுத்துகிறது. அந்த பொலிவு கூட பெற்றோருக்கு ஒருவித பயத்தைதான் ஏற்படுத்துகிறது.

நம் நாட்டுபுறவியல் நூல்களில் இது பற்றிய பல பாடல்கள் இடம் பெற்றுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

"புத்தியறிந்ததின் மேல் பூவைதனை பொம்மணனும்
வீட்டிற்கு மேற்கே ஒரு நாழிதூரத்தில்
பச்சைக்குடிசை கட்டிப் பணிபாயலங்கரித்து
பொம்மியம்மாளைப் பொங்கமுடன் கூட்டிவந்து
அந்தக் குடிசைதனில் அமர்ந்திருக்கச் செய்ய வைத்து

புகழேந்தி புலவர், மதுரை வீராசாமி கதை
1952 ப.84

அதுபோல பூப்பெய்திய நாட்களில் பெண்ணின் குடும்பத்தினர் எந்த வேலையும் செய்யக்கூடாது என்று வேறு கட்டுப்பாடு வைத்திருந்தனர். குறிப்பாக சமையல் பண்ணக்கூடாது என்பதையும் மற்றவர் சமைத்த உணவை பூப்பெய்திய பெண் சாப்பிடவேண்டும் என்பதை கீழ்க்காணும் பாடல் குறிப்பிடுகிறது.

மாமியா சுட்டுப்போட்டு
மாதளங்கா(ய) பூப்போல
நாத்தனாச் சுட்டுப்போட்டு
நார்த்தங்காய் பூப்போல
தாய்சுட்டுப் போட்டு
தாழம்பு பூப்போல

க.கிருஷ்ணசாமி
கொங்கு
நாட்டுப்புறப்பாடல்
தொகுப்பு 2 ப.130

கன்னிப் பெண்களுக்கு மனித குலத்தை வளர்க்கும் உருவாக்கும் அளவற்ற ஆற்றல் இருக்கிறது என்றும், சூரியனை பார்த்தால் அவர்களுக்கு மகப்பேறு கிடைக்கும் என்றும், நம்பிக்கை வகுத்திருக்கிறார்கள். அதனால்தான் குடிசை கட்டி பெண்ணை அதில் உட்கார வைத்திருந்தார்கள்

என்று சொல்கிறார் புகழேந்தி புலவர்.

ஏறினபோதே எடுத்தார் நெடுங்குடைகள்
கத்திக் குடைபிடித்து சூரியனை காணாமல்
பக்கக்குடை பிடித்தார் பகலோலை காணாமல்
கவிந்து குடைப்பிடித்தார் கற்றோனை காணாமல்

புகழேந்திப் புலவர்
வனகொடிமாலை
1044.70

வடமொழியை எடுத்துக்கொண்டால் பூப்பெய்துவதை புஷ்பவதி என்று குறிப்பிடுகின்றனர். அதாவது மனித இனப் பெருக்கத்திற்கு பெண் பக்குவமடைந்து விட்டாள் என்பதை அச்சொல் விளக்குகிறது.

மொட்டு பூவாகிறது
பூ காயாகிறது
காய் கனியாகிறது

இதில் மொட்டு பூவாகிறது என்றால் பின்னால் பலன் கிடைக்கும் என்பது பொருள். எனவேதான் பூப்பெய்தினாள் என்ற சொல்லும் வழக்கத்திலிருக்கிறது.

தொல்காப்பியத்தை எடுத்து கொண்டால் உழவு தொழிலின் துவக்கத்தைப் போலவே பூப்பெய்தலும் குழந்தை பேற்றிற்குரிய காலம் தொடங்கிவிட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது.

நாகரிகக் காலத்திற்கு முந்திய காலத்தில், பூப்பெய்தும் காலத்தில் வரும் குருதியை கண்டு மக்கள் பயந்தனர். அதனால் பூப்பெய்திய பெண்ணை தனிமைப்படுத்தினர். பெண் ஏதோ பாவம் செய்துவிட்டாள் அதுதான் கடவுள் இப்படி தண்டிக்கிறார், எனவே அவளை யாரும் தீண்டக் கூடாது என்று நினைத்தனர். நாகரிக காலத்தில் அந்த மூடநம்பிக்கை மற்றும் சமுதாயத்தில் வேறு விதமான பெண்ணிற்கு பல கட்டுப்பாடுகள் அடிமைத்தனர், சுதந்திரமின்மை, அடக்குத்தனம் போன்றவை திணிக்கப்பட்டு நீ

மாசுபட்டவள், ஒதுக்கப்பட்டவள், நீ அனைவருக்கும் கட்டுப்பட்டிருக்க வேண்டும், நீ மாற்றானுக்கு மனைவியாக போகிறவள், குழந்தைகளை பெற்றெடுத்து பராமரிப்பது தான் உன் வேலை அதற்கு நீ ஆயத்தமாகிவிட்டாய் என்று பல வழிகளில் அவர்களை புரிய வைத்த இந்த சமுதாயம் மனரீதியான, உடல் ரீதியான என்ன மாற்றங்களை அவள் சந்திக்க வேண்டும் என்பதை வலியுறுத்தத் தவறிவிட்டார்கள். அவர் பெற்றோருக்கு இது பற்றிய விழிப்புணர்ச்சி இல்லாததுதான். படித்த விபரம் தெரிந்த பெற்றோரும், ஆசிரியரும் கூட இதுபற்றி பெண் குழந்தைகளிடம் பேச வேண்டும். அது பற்றிய கல்வி கொடுக்க வேண்டும் என்று சொல்லும் போதே அதை ஏதோ பெரிய தவறு செய்ய போகிறோம் என்றே பார்க்கிறார்கள், குறிப்பாக ஆசிரியர்கள் பல விசயங்களை 6ஆம் வகுப்பிலிருந்தே மாணவியருக்கு போதிக்க தொடங்கினால் இளைய பெண் சமுதாயம் ஓர் விழிப்பு உணர்வுமிக்க, தன்னை முழுமையாக அறிந்து கொண்ட பக்குவம் வாய்ந்த பெண் சமுதாயமாக வளர வாய்ப்புள்ளது. அதோடு இளம் வயதில் வரும் அறியாக் காதல், அதனால் ஏற்படும் விபரீதங்கள் குறையவும் பெற்றோர்கள் தைரியமாக பெண்களை வெளியிலே அனுப்பவும் உதவியாக இருக்கும்.

கீழே கொடுக்கப்பட்ட பாடலைப் பார்த்தால் ஓர் தாய் தன் மகள் வீட்டை விட்டு வெளியில் போய் மீண்டும் வீட்டிற்கு வரும்வரை எப்படி பயமுடனும் இந்த சமதாயம் எப்படி கெட்டு போயிருக்கிறது என்பதை விவரிக்கிறது.

தண்ணிக்குப் போ மகளே
தடம் பாத்து போ மகளே
முட்டாளும் பையங்கண்டா
முகங்கொடுத்துப் பார்க்காதே
பாசங்கலந்து வரும்
பலபேரும் மோக்கும் தண்ணி
நீரும் கலந்து வரும்
நின்னு மோக்க நேரமாகும்.

வரதராசன் 1988.ப.261

ஆனால் அதே பெண்ணிற்கு செக்ஸ் பற்றிய, தன் உடல் பற்றிய விழிப்புணர்ச்சி கொடுத்தால் இந்த பாடல்களே தேவையில்லை எனலாம். இதுப் பற்றிய விழிப்புணர்வை கொடுப்பது நம் ஒவ்வொருவருடைய பொறுப்பும் கடமையும் ஆகும்

அச்சகம் : அழகு பிரிண்ட்ஸ், சென்னை-41
செல்:9600122291

**பெண்கள் முன்னேற்றம் மற்றும் ஆராய்ச்சி மையம்**

23, ஜெயராம் தெரு, 4, வசந்த் அப்பார்ட்மெண்ட், டி பிளாக்,
குப்பம் பீச் ரோடு, திருவான்மியூர், சென்னை-600 041.

Email: cwdrindia@gmail.com, website:www.cwdr.org